சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.35/2023

07.10.2025

வா.சா.1 திரு. தியாகராஜன், த/பெ. சம்மந்தம்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதி கடன் வாங்கியதாக கூறப்படும் தேதி 10.01.2021 என்றால் ஆமாம். அந்த தேதியில் பிரதிவாதி காசோலையை எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த தேதியில் வேறு ஏதேனும் கடனுறுதிசீட்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். காசோலை கொடுத்ததாக கூறப்படும் தேதி என்னவென்றால் 23.09.2021 ஆகும். பிரதிவாதி காசோலை கொடுத்ததாக சொல்லும் 23.09.2021 அன்று என்னிடம் பணம் வாங்கவில்லை என்றால் சரிதான். இந்தியன் வங்கி கிளைக்குண்டான காசோலை கொடுத்தார், காசோலை எண் தெரியவில்லை. காசோலையை எனது நண்பர் பூர்த்தி செய்தார். எனது நண்பர் காசோலையில் எனது பெயரை எழுதினாரா என்றால் ஆமாம். காசோலையில் எனது நண்பர் தான் தொகையை எழுதினாரா என்றால் ஆமாம். பிரதிவாதி தாவா காசோலையில் கையொப்பம் மட்டும் போட்டுக்கொடுத்தார் என்றாலும் மற்ற விவரங்கள் என் நண்பர் பூர்த்தி செய்தார் என்றாலும் சரிதான். பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கியதற்காக காசோலை கொடுக்கவில்லை என்றாலும் வேறு ஒரு காரணத்திற்காக காசோலை கொடுத்தார் என்றாலும் சரியல்ல. நான் தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்காக தாவா காசோலையை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனவே தாவா காசோலையின் அடிப்படையில் எந்த பரிகாரமும் கோர இயலாது என்றால் சரியல்ல. சுத்தமான கரங்களுடன் இந்த வழக்கை தாக்கல் செய்யாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

| |
|---|
| Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.<br><br>Sd/ M. Murugan<br>Subordinate Judge,<br>Tiruvarur. |